வகுப்பு: 10 தமிழ் – முதல் தாள்
விடைக் குறிப்புகள்

## பகுதி – I

பலவுள் தெரிக:-

1. ஆ. அதியன்; பெருஞ்சாத்தன்
2. அ. சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
3. இ. அன்மொழித் தொகை
4. ஆ. இறைவனிடம் குலசேகராழ்வார்.
5. ஆ. திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.
6. ஆ. மோனை, எதுகை
7. ஆ. சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
8. ஆ. வனத்தின் நடனம்
9. இ. (1) – (iv), (2) – (iii) (3) – (i) (4) – (ii)
10. (இ) தங்கக் கட்டிகளை ஏடாக
11. (இ) வலிமையை நிலைநாட்டல்

12. (ஆ) சிற்றிலக்கியம்
13. (இ) காலில் அணிவது
14. (அ) எண்ணும்மை
15. (அ) பட்ட, பொட்டொடு

பகுதி - II

16. 'எல்லாராலும் விரும்பத்தக்க நாகரிகத்தை விரும்புவர் நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவர்.

17. (அ) ம.பொ.சி எந்தப் பாடல்களை பாடி பின்னைப் பருவத்தில் இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்?

(ஆ) நெய்தல் நிலத்தவர், பாணர்களை வரவேற்று என்ன கொடுத்தனர்?

18. * கும்பகர்ணனுடைய பொய்யான வாழ்வு இன்றிலிருந்து இறங்குகிறது. அதைக் காண்பதற்கு எழுந்திடுக என்றும்,
* உன்னைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் படுத்து உறங்கிடுக என்றும் சொல்கிறார்கள்

19. * செயற்கை நுண்ணறிவால் நோய்களைக் கண்டறியும் ஆராய்ச்சி

* செயற்கை நுண்ணறிவால் வயதானவர்களுக்கு உதவும் ரோபோக்களைக் கண்டறிதல்

20. * சாலையின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்க வேண்டும்.

* மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப் பட்டை அணிய வேண்டும்.

21. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

திருவள்ளுவர்

22. கலைச் சொற்கள்

Artifacts : கலைப் படைப்புகள்

Myth : தொன்மம்.

மாற்று வினா:

கண்ணுக்கு இனிமையாக இருக்கும் பச்சைப் புல்வெளிகளில் கதிரவனின் மஞ்சள் வெயில் பரவிக் கிடக்கிறது.

23. ஆலும் வேலும் — ஆலமரம், வேலமரம்
நான்கு, இரண்டு — ௪ , ௨

24. சொல்லல் வினா,
இனமொழி விடை.

25. "தம்பி! எங்கே நிற்கிறாய்?"
"நீங்கள் கூறிய இடத்தில் தான்
அண்ணா! எதிர்ப்பக்கத்தில்
ஒரு தேநீர் கடை இருக்கிறது".

26. மறைந்து — மறை + த்(ந்) + த் + உ
மறை — பகுதி
த் — சந்தி (ந்) ஆனது விகாரம்
த் — இறந்த கால இடைநிலை
உ — வினையெச்ச விகுதி

27. காசிம் புலவர், குணங்குடி மஸ்தான்
சாகிப், சேகனாப் புலவர், செய்கு
தம்பிப் பாவலர்

28. தண்ணீர் குடி — இரண்டாம் வேற்றுமைத்
தொகை
ஆசிரியர் மாணவரிடம் தினமும் நான்கு
லிட்டர் தண்ணீரைக் குடிக்கச்
சொன்னார்.

* தயிர்க் குடம் - தயிரையுடைய குடம்
இத்தொடரில் இரண்டாம் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தொகை உள்ளது.
பெரியம்மா தயிர்க்குடத்திலிருந்து தயிரை எடுத்துக் கொடுத்தார்கள்

2

பகுதி III

29. * படம் ஒன்று - பரதநாட்டியம்
பரத நாட்டியம் தமிழ் நாட்டிற்குரிய நடனம்.
* இதைப் பெரும்பாலும் பெண்கள் ஆடுவர்.
* இதற்கு பாடல், நட்டுவாங்கம் மற்றும் இசைக் கருவிகளின் துணை தேவை.

படம் இரண்டு - கரகாட்டம்
* தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்று.
* கோவில் திருவிழாக்களில் கரகாட்டம் இடம் பெறும்
* கரகாட்டத்தை குடக்கூத்து என்றும் கூறுவர்

30 பத்தி வினா விடை

(அ) போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

(ஆ) தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது.

(இ) பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும்.

31. 1. இலக்கியங்களில் நான், என்னைத் தேக்கி வைத்த தமிழன்.

2. பாசனத்திற்கு நான்

3. என்னை மாசுபடுத்தாதீர், பிறக்கும் போதும் நான் இறக்கும் போதும் நான்.

32 ஆழ்வார் தன்னை நோயாளியாகவும், பெருமானை மருத்துவராகவும் உவமைப் படுத்துகிறார்.

33. இடம் :- நாகூர் ரூமியின் கவிதைப் படைப்புகளுள் ஒன்றான சித்தாளு கவிதையில் அமைந்துள்ள வரிகள்

பொருள் : கட்டடங்கள் உருவாக்குவதற்கு
காரணமான தொழிலாளியின்
~~மனச்~~ மனச் சுமைகளைச்
செங்கற்கள் அறிவதில்லை.
கற்களை சுமந்தால் மட்டுமே
அடுத்த வேளை உணவு.
இவர்களின் மனச் சுமைகளைச்
செங்கற்களும் அறிவதில்லை
மனிதர்களும் அறிவதில்லை.

34. அடிப் பிறழாமல் எழுதுக.

(அ) புண்ணியப் புலவீர் யான் இப்போது
இடைக்காடனார்க்கு இப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க
எனப் பராவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ
நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத்
தணிந்தது என்னா.
— பரஞ்சோதி முனிவர்

(ஆ) நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர் அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம் கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே
— வீரமா முனிவர்

## பகுதி-3

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்.

* அளவடிகளைப் பெற்று வரும்
* அகவலோசை பெற்று வரும்
* ஆசிரியத் தளைகள் பயின்று வரும்.

36 அலகிட்டு வாய்பாடு

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தொகுத்தகை | நிரை + நிரை | கருவிளம் |
| உள்ளும் | நேர் + நேர் | தேமா |
| படையொடுங்கும் | நிரை + நிரை + நேர் | கருவிளங்காய் |
| என்னார் | நேர் + நேர் | தேமா |
| அழுதகண் | நிரை + நிரை | கருவிளம் |
| ணீரும் | நேர் + நேர் | தேமா |
| அனைத்து | நிரைபு | பிறப்பு |

37 அன்பும் அறனும் உடைத்தாயின் - - - -
- - - அது.

நிரல் = வரிசை, நிறை = நிறுத்துதல்

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் ... ... அது.

அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படி கூறி உள்ளதால் இது நிரல் நிறை அணி.

## பகுதி IV

38. காசிக் காண்டம் கூறும் இல்லற ஒழுக்கம்:

(1) விருந்தினரை வியந்து உரைத்தல்
(2) இனிமையாக பேசுதல்
(3) வீட்டிற்குள் வருக என வரவேற்றல்
(4) உபசரித்தல்
(5) வாயில் வரை சென்று வழியனுப்புதல்

என் வீட்டிற்கு வந்த விருந்தினரை வாங்க வாங்க என்று அழைத்தேன். பயணம் சிறப்பாக இருந்ததா என்று விசாரித்தேன். வீட்டின் அனைவரும் நலமாக உள்ளார்களா என்று நலம் விசாரித்து விட்டு சிற்றுண்டி தயார் செய்து வழங்கினேன். அவர்கள் கிளம்புவதாக சொன்ன போது வாயில் வரை சென்று வழியனுப்பினேன்.

38 (ஆ) கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை

தாதுகு சோலை தோறுஞ் சண்பகக்
காடு தோறும் - - - - - - - - உலாயதன்றே

இதில் இயற்கை தொகுதியுங் கூட பெரிய கலை நிகழ்ச்சியே நடப்பதான தோற்றமாக காட்டுகிறார் கவிஞர்.

வெய்யோன் ஒளி தன் மேனியின் - - - -
- - - அழியா அழகு உடையான்.

இராமனின் அழகையும் சீதையையும் வர்ணிக்கும் போது சந்த நயத்தை நயமாக எடுத்துக் கையாள்கிறார் கம்பர்.
இராமனது நிறம் மையோ? பச்சை நிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ உ கார் மேகமோ? என்று அவனது ஒப்பற்ற அழியாத அழகினை ஆசிரியர் கூறுகிறார்.
தோழமை என்று இராமன் சொன்ன சொல் ஒப்பற்ற சொல் அல்லவா! தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போக விட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா. என்று குகன் கூறுவதாக கவிதையைப் படைக்கிறான் கம்பன்.

மேலும் உறக்கத்திலிருக்கும் கும்பகர்ணனை எழுப்பக் கீழ்வரும் கவிதையில் தீட்டுகிறான்
"உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெலாம் இறங்குகின்றது! இன்று காண் எழுந்திராய்! எழுந்திராய்

அ.

கடிதம் சென்னை

/ /2020

அன்புள்ள நண்பன்/தோழி,

நலம். நலம் அறிய ஆவல். உன் படிப்பு எப்படி செல்கிறது.? கொரானா தொற்று அதிகமாக உள்ளதால் எங்கும் செல்ல இயலவில்லை.. நான் இந்த விடுமுறையில் நிறைய புத்தகங்கள் படித்தேன். அதில் எனக்கு மிகவும் பிடித்த புஸ்தகத்தை பற்றி கூறப் போகிறேன். நான் படித்த புத்தகம் "கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள்". மீண்டும் மீண்டும் படிக்கத் தோன்றும். "யாத்திரை" என்ற பாடலை படிக்கும்போது கள்ளம் இல்லாத நெஞ்சம், நல் உறுதி உடைய உள்ளம் எது என்பது புலப்படுகிறது. உழைக்கும் மனிதனுடைய வாழ்வையும், நிலையையும் காட்டும் கவிதைகள், ஓயாமல் உழைக்க வேண்டும், மழை, புயல், நிலா, வான்மீன் முதலியன பற்றி ஆசிரியர் பாடிய கவிதைகள் கற்பவர் உள்ளத்தைக் கவர்கின்றன.

நேரம் கிடைக்கும் போது நீயும் இதை
போன்ற புஸ்தகத்தைப் படி.

இப்படிக்கு,
அ அ அ

உறை மேல் முகவரி

க. ராம்
5, அன்னை நகர்
திருநெல்வேலி.

(ஆ) செயல் திட்ட வரைவு

(1) பள்ளியின் வளாகத்தில் உள்ள மரம், செடி, கொடிகளிலிருந்து விழும் இலைகள், உடனுக்குடன் அப்புறப் படுத்த வேண்டும். இல்லையேல் அவை நீரையச் சேர்ந்து பல கிருமிகளின் உறைவிடமாக மாறிப் போய் நோய்களின் உற்பத்தி இடமாக மாறிவிடும்.

(2) பள்ளி மைதானங்கள் மீது யாருமே கவனம் செலுத்துவதில்லை. ஆங்காங்கே நீர் தேங்கி நிற்கும் இவற்றை தவிர்க்க மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மைதானத்தை சமமப் படுத்த வேண்டும்.

(3) குப்பைகளை மக்கும் குப்பை - மட்காத குப்பை என்று பிரித்து தனித்தனிக் குப்பைக் கூடைகளில் போட வேண்டும்.

4) பள்ளியில் தூய்மை இயக்கம் தொடங்கி மாணவர்களை, பல குழுக்களாக பிரித்து அவர்களுக்கு மரம், செடி, கொடிகளைக் கொடுத்து வளர்க்கச் சொல்வேன்.

40. அ. குழந்தை ஒன்று ரோபோவுடன் சதுரங்கம் விளையாடுகிறது

வருங்காலத்தில் இது போன்ற காட்சிகளையே காணமுடியும்

பெற்றோர்களுக்கு குழந்தைகளுடன் விளையாட நேரமில்லை

குழந்தைகளும் வெளியே சென்று ஆடினால் உடல் நலம் இருக்கும்

உள்ளரங்க விளையாட்டான சதுரங்கம் நல்ல விளையாட்டு

41.

தன் விவரப் பட்டியல்

பெயர் : பூங்கொடி

பிறந்தநாள், வயது : 10.11.2002, 18.

பாலினம் : பெண்

தந்தையின் பெயர் : தமிழரசு

முகவரி : எண் 6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டம்.

10ம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் : 480

பட்டப் படிப்பு : இ.ப.இ.ர

தாய் மொழி : தமிழ்
பயின்ற மொழிகள் : தமிழ், ஆங்கிலம்
கணினி : வேர்டு, பவர் பாயிண்ட், வேர்டு எக்செல், டாலி, பைதான்

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் கணினி பணி தந்தால் என் பணியைச் சிறப்பாகச் ~~செய்~~ செய்வேன் என உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
பூங்கொடி.

42. அ.

| | |
|---|---|
| (1) கல்வெட்டுகளின் பதி அறியவாகும் செய்திகளை என் நண்பர்களுக்கு கூறுவேன். | (1) அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன் |
| (2) கல்வெட்டுகள் குறித்து, அவர்களை பெருமிதம் அடையச் செய்வேன். | (2) நம் முன்னோர்களின் பண்பாட்டை அறிய உதவும் வெட்டெழுத்துக் களை, எவரும் சிதைக்காமல் பாதுகாப்பேன் |
| (3) பழந்தமிழர் வரலாறாகும் ஆவணங்களைப் பாதுகாக்க உதவுவதோடு, அது குறித்த செய்திகளை மற்றவர் அறியக் கூறுவேன் | 3) ஆவணங்களைப் படி எடுத்துச் செய்திகளைக் கணினியில் பதிவு செய்து, அனைவரும் அறியச் செய்வேன் |

42 (ஆ) மொழி பெயர்ப்பு

தமிழ் நாட்டில் உள்ள சங்கத் தமிழ் இலக்கியங்களில் ஐந்து புவியியல் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் மருத நிலமே சாகுபடிக்கு ஏற்ற வளமான நிலப்பரப்பைக் கொண்டது. உழவர்களின் வளமை சூரிய ஒளி, பருவகால மழை, மண் வளம் முதலியவற்றை நம்பியிருந்தது.
பழங்காலத் தமிழர்களின் கணிப்புப்படி, இந்த அனைத்து இயற்கை உறுப்புகளிலும் சூரிய ஒளியே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

செயல்முறைத் திறனாளர்களுக்கான மாற்றுவினா:

1. மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம்
2. பள்ளிகள், தனியார் நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்
3. இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப் படுத்தும் நோக்கில் பிற மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சி.
4. மொழி பெயர்ப்பை கல்வியாக ஆக்குவதின் மூலம் அனைத்தையும் அறிய, வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல், நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும்
5. மொழி பெயர்ப்புக் கல்வி.

43 அ. வைகறைப் பொழுதில் வீட்டு வாசலில்
விருந்தினர் வந்து நின்றனர். என் தந்தை
அதில் வந்தோரை வாருங்கள் என மலர்-
ந்த முகத்தோடு முகம் நோக்கி வரவேற்றார்.
அம்மா தேநீர் கொடுத்து உபசரித்தாள்.
சிறிது நேரம் கிராமத்து நிகழ்வுகள், உறவுகள்
பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

கோடைக் காலமாதலால், குளிர்ந்த நீரில்
குளிப்பதற்கு தேவையான வற்றைக்
கொடுத்து, நீராடச் செய்தோம். காலைச்
சிற்றுண்டி தயார் ஆனது. பூ போன்ற
இட்லி, சட்னி, சாம்பார், பூரி கிழங்குகள்
ஆகிய வற்றை பரிமாறி மகிழ்ந்தோம்.

வீட்டின் வாயில் வரை சென்று அவரை
வழியனுப்பி வைத்தோம். அப்பொழுது பசித்த
முகத்துடன் கையில் குழந்தையுடன் ஒரு
ஏழைத் தாய் நின்று கொண்டிருந்தார்.
அவருக்கும் நான் உணவு அளித்தேன்.
அவர் அதை உண்டதும் மிக நன்றி
உணர்ச்சியோடு என்னைப் பார்த்தார்.
நான் கடவுளுக்கு நன்றி கூறினேன்.

43. (ஆ) "மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்"

நாட்டு விழாக்கள்

நாம் நம் நாட்டை நினைத்து உவகை கொள்ள நாட்டு விழாக்கள் பல உள்ளன. நம் பாரத நாட்டில் கொண்டாடப் பெறும் ஆகஸ்ட் பதினைந்தாம், ஜனவரி இருபத்தி ஆறும் விடுதலை விழாவும், குடியரசு விழாவும் ஆகும். இவ்விரண்டு முக்கியமான நாட்டு விழாக்கள் போக எண்ணற்ற விழாக்கள் உள்ளன.

• இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு:

நமது இந்தியாவின் விடுதலைக்காக நாடு முழுவதும் ஆயிரக் கணக்கான மக்கள் போராடினர். கொடி காத்த குமரன் இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது ஆங்கிலேய போலீசாரின் தாக்குதலையும் தாங்கிக் கொண்டு நமது தேசியக் கொடி கீழே விழாமல் பிடித்திருந்தார்.

நாட்டு முன்னேற்றத்தின் மாணவர் பங்கு

நாட்டுக்காக மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள். அவர்கள் சமூதாய உணர்வுகளுடன் வளர்ந்தால் தான் நாடும், வீடும், நலம் பெறும்.

## மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்

இந்தியாவின் வளர்ச்சியே மாணவர்களின் கையில் தான் உள்ளது. மண்ணைக் கையில் தான் உள்ளது. மண்ணைக் உழைத்தால் தான் பண்டம் வரும். மாணவர்களை செம்மைப் படுத்தினால் தான் இந்தியா வளரும்.
இந்தியாவின் வேலிகளாக மாணவர்கள் இருந்தால் தான் இறாம் இவைதாகாது. காந்தி தேசத்தில் கோட்சேக்களை வளர விடக்கூடாது. இந்தியாவை அச்சுறுத்தும் தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான, நல்ல யுக்திகளை மாணவர்களே தாயம் கையாள வேண்டும்.

### முடிவுரை

மாணவர்கள் நாட்டுமுன்னேற்றத்தில் இணைந்து செயல்பட்டால், நாடும் முன்னேறும், ஊரும் முன்னேறும், புதிய இந்தியா உருவாகும்.

44. (அ) புயலிலே ஒரு தோணி

முன்னுரை: தமிழர்கள் புலம் பெயர்ந்த நிகழ்வைப் பற்றி கூறும் முதல் புதினம் புயலிலே ஒரு தோணி. ஆசிரியர் இந்தோனேசியாவில் இருந்த போது தென் கிழக்காசியப் போர் மூண்டது.

இந்நிலையில் கடற்கரையில் நிகழ்ந்தவற்றை
உள்ள கற்பனைப் படைப்போடு இப்பகுதி
மாகும்.

வருணனை:-

கொளுத்தும் வெயில் இமை நேரத்தில்
மறைந்தது. மேகங்கள் மொய்த்து
கும்மிருட்டு ஆனது. ஒரே இறுக்கம், இடி
முழக்கத்துடன் மின்னல் கீற்று
வானைப் பிளந்தது. வானம் கொட்டியது.
சூறாவளி ஆடிக் குதித்து கொக்கலித்தன.
வானுடன் கடல் கலந்து விட்டது. இருமைன
அமைதி. வானும் கடலும் பிரிந்து தென்பட்டன.
வானும் கடலும், வளியும், மழையும்,
சேர்ந்து கூக்குரல் இட்டது. வான் பிளந்து
தீ கக்கியது.

அடுக்குத் தொடர்கள்

தொங்கான் நடு நடுங்கித் தாவக் குதி குதித்தது.
தொங்கான் குதித்து விழுந்து நொறு
நொறு என்று நொறுங்கியன.
சுழன்று கிறு கிறுத்துக் கூத்தாடியது

ஒலிக்குறிப்புச் சொற்கள்

தொங்கான் தாவி விழுந்து, சுழல்கிறது
கிறு கிறு மரமரப்புப் பொய்ங் புய்ங்,
ஒரு நொய்ங் புய்ங் என இடிமுழக்கச்
சீனப் பாசாக்கள் தாவி வீசுகின்றன.

தோணி படும் பாடு

வான், கடல், வளி, மழை ஆகிய நான்கும்
சேர்ந்து கப்பலை நொறு நொறு வென
நொறுக்கியது, தூக்கி எறியப்பட்ட
பெட்டிகளும், கப்பல்களும் மிதந்து உடன்
வந்தன.

முடிவுரை:

கடலில் கப்பலின் போராட்டம் மிக அழகாக,
வருணனைகளோடும், அடுக்குத் தொடர்களோடும்
ஒலிக் குறிப்புகளோடும் இக்கட்டுரையை
தெளிவாகவும், கற்பனை நயத்துடன் ஆசிரியர்
ப. சிங்காரம் கூறியுள்ளார்.

4(ஆ) உண்மைக் கலைஞன் தன் கலையின்
மூலம் ஈடுபாட்டைக் காட்டுவான். தன் வித்தை
கலைஞர்களிடமிருந்து வேறுபட்டு தமக்கென
தனித் தன்மையைக் காட்டுவர்.

எங்கள் தெருவில் பகல் வேடக் கலைஞர்
ஒருவரைக் கண்டேன். அவர் அனுமார்
வேடமிட்டு அனைவரையும் மகிழ்வித்தார்
அனுமார் குரங்கு போல ஆடி வந்தார்,
வலது காலையும், இடது காலையும்,
மாறி, மாறித் தரையில் உதைத்து வேகமாகக்
கைகளை வீசி நடக்க ஆரம்பித்தார்

சதங்கையும், மேளமும், தாளமும், நாதஸ்வரமும் ஒன்றாக இசைத்தன. அமைச்சர், திரைக் குதித்துக் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து சென்றார்.

ஆட்டம் முடிந்தது. அமைச்சர் தன் வேடத்தை கொஞ்சம் கொஞ்சமாக கலைந்தார். நான் ~~அவரு~~ அவர் அருகில் சென்று அவரது ஆட்டத்தைப் பற்றி வியந்து கூறிய போது, அவர் தம்பி! என்னைப் போன்ற பகல் ~~நேரக்~~ வேடக் கலைஞர்கள் தெருவில் நடக்கும் போது அவர்களைப் பார்த்து ஏளனமாக சிரிப்பது, கையை தட்டுவது போன்ற செயல்களில் பொது மக்கள் ஈடுபடும் போது நாங்கள் மனதளவில் பாதிப்படைகிறோம்.

இது போன்ற இடர்பாடுகளை கலைஞர்கள் சந்திப்பதால் கலையின் மீது கொண்ட பற்றுக் குறைந்து வருகிறது.

45 (அ) <u>திணை விதைத்</u>

உள்ளே . . . . "

- முன்னுரை – இளமைப் பருவம்,
- விடுதலைப் போராட்டத்தின் நான்,
- பொதுநலமே தன்னலம்,
- எளிமையே அறம்
- நாட்டின் முன்னேற்றமே நோக்கம்
- எளியோரின் அன்பே சொத்து

பொது நலமே தன்னலம்

ஆங்கிலேயரைத் தன் புறத்தில் விடுதலை பெறுவதனை விட அமைதியான முறையில் அவர்களை எதிர்த்து, மனம் மாறச் செய்து விடுதலை பெறுவதே சிறந்தது என்றார். இந்தியா மற்ற உலக நாடுகளுக்கு வழி காட்டியாகத் திகழ வேண்டும் என்று விரும்பினார்.

எளிமையே அறம்

மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தவர் காந்தி அடிகள். தன் மனைவி கஸ்தூரிபாய் காந்தியையும் அவ்வாறே நடந்து கொள்ளச் செய்வார். ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதைக் கண்டு தாமும் மேலாடை அணிவதை நிறுத்திக் கொண்டார்

நாட்டின் முன்னேற்றமே நோக்கம்

நமது நாட்டிற்குரிய கிராமத் தொழில்களையும், நாட்டுப்புற கலைகளையும் வளர்க்க வேண்டும் என்றார். தன் நாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது என்று கூறினார்

எளியோரின் அன்பே சொத்து

மனிதரோடு மனிதராய் வாழ்ந்து, மனிதர்க்காக வாழ்ந்து மகாத்மாவாக உயர முடியும் என்பதை மெய்ப்பித்தார். எளிமையான வாழ்க்கையே எளியோரின் அன்புக்காக வாழ்ந்தவர்

முடிவுரை: நாம் ஒற்றுமையாக இருப்பதே காந்தியடிகளுக்குச் செய்யும் நன்றியாகும்

## முன்னுரை

'தேசத் தந்தை' என்று போற்றப்படும் பெருமைக்குரியவர் அண்ணல் காந்தியடிகள் தம் வாழ்க்கை முழுவதும் நாட்டுக்காகவே உழைத்து நாட்டுக்காகவே உயிர் துறந்த ஒப்பற்ற தலைவர் காந்தியடிகள்.

## இளமைப் பருவம்

அண்ணல் காந்தியடிகள் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் சிறிய கிராமத்தில் 1869ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் தந்தை காபா காந்திக்கும் தாய் புத்திலி பாய்க்கும் மகனாகப் பிறந்தார். இந்தியாவில் பள்ளிக் கல்வியைக் கற்ற காந்தியடிகள், இங்கிலாந்து நாட்டில் சட்டம் பயின்று "பாரிஸ்டர்" பட்டம் பெற்று வழக்கறிஞரானார்.

## விடுதலைப் போராட்டம்

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தியடிகள், வெள்ளையர்களின் அடக்குமுறை ஆட்சியைக் கண்டு மனம் கொதித்தார். உப்புச் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்புப் போராட்டம், வெள்ளையனே வெளியேறு போராட்டம், வரிகொடா இயக்கம் போன்ற பல்வேறு போராட்டங்களையும் வன்முறை இல்லாமல் அறவழியில் அமைதியான முறையில் நடத்தினார்.

45 (ஆ) முன்னுரை

இன்றைய அறிவியல் வளர்ச்சி என்பது இயற்கையின் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் சிந்தனையை வளர்ப்பதற்கு உரியதாக இருக்கிறது. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர்.

விண்வெளியில் தமிழரின் அறிவு

உலகம் என்னும் தமிழ்ச் சொல் உலவு என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. வானத்தில் காற்றில்லா பகுதியும் உண்டு. இதனை 'வறிது நிலைஇய காயமும்' என்னும் பாடல் வரி உணர்த்தும். உலவனால் அளவப்படாத வான உணர்தியைப் பழந்தமிழர்கள் விண்ணில் செலுத்தியிருக்கிறோம்.

கல்பனா சாவ்லா

விண்வெளியில் பயணம் செய்த முதல் இந்திய வீராங்கனை "கல்பனா சாவ்லா" நாசா அமைப்பின் ஆராய்ச்சிக் கூடத்தில் துணைத்தலைவராக பொறுப்பு பெற்ற பின் கிளைடர்கள், விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றார். இத்துறை விமானம் ஓட்டவும் அனுமதி பெற்றார். மற்றவர்களுக்கும் பயிற்சியும் அளித்தார்

விண்வெளிப் பயணம் செய்த கொலம்பியா பயண முதல் இந்தியப் பெண்ணாகிய சாவ்லா STS 107 இரண்டாவது பயணம் மேற்கொண்டார். பதினாறு நாள் பயணம் மேற்கொண்டு பூமிக்கு திரும்பிய போது டெக்ஸாஸ் வான் பரப்பில் விண்கலம் வெடித்துச் சிதறியது. தன் கனவை நினைவாக்கிய சாதனைப் பெண் கல்பனா சாவ்லா பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்தார்.

**விண்ணியல் அறிவில் வருங்கால மேற்கொள்ள வேண்டியவை:**

பேரண்டம் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். கோள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து விண்ணியல் அறிவில் சாதனை படைக்க வேண்டும்.

**முடிவுரை**

தமிழர்கள் பரந்துபட்ட அறிவியல் சிந்தனை உடையவர்கள். அறிவியல் கூறுகளையும் நன்கு உணர்ந்தவர்கள். அறிவியல் அறிஞர்கள் இலக்கிய அறிவுடன் ஆராய்ச்சி செய்தால் பல அரிய செய்திகளைத் தமிழ் உலகம் பெற முடியும்